




# அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa | www.Aagaramuthalaa.com



விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



செவ்வாய், செப்டம்பர் 07.2021 | கடலூர் | மலர்:09 இதழ்:08


# கடலூர் மாவட்ட செய்திகள்

## தேசிய காசநோய் ஒழிப்பு திட்டம்-நடமாடும் எக்ஸ்ரே வாகனத்தை

### மாவட்ட ஆட்சியர் கி.பாலசுப்ரமணியம் தொடங்கி வைத்தார்



தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத்தின் மூலம் நடமாடும் எக்ஸ்ரே வாகனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் கி.பாலசுப்ரமணியம், தொடங்கிவைத்தார். கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் மூலம் நடமாடும் எக்ஸ்ரே வாகனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் கி.பாலசுப்ரமணியம், கொடியசைத்து தொடங்கிவைத்து பொதுமக்களுக்கு காசநோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார். தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் சார்பாக கடலூர் மாவட்டத்தில் சிறப்பு காசநோய் கண்டுபிடிப்பு முகாம் இரண்டு மாத காலத்திற்கு நடைபெறுகிறது. இந்த முகாமில் நடமாடும் எக்ஸ் ரே வாகனம் மூலம் காசநோய் கண்டறியப்படவுள்ளது. கடலூர் மாவட்டத்தில் நடுவீரப்பட்டு, ஒரையூர், மருங்கூர், வடலூர், மங்களம்பேட்டை, நல்லூர், மங்கலூர், கம்மாபுரம், ஒரத்தூர், ஆயக்குடி, சிவக்கம், கிருஷ்ணாபரம், புதுசத்திரம் ஆகிய வட்டார மருத்துவமனைகளில் வரும் 30 ம் தேதிவரை எக்ஸ்ரே வசதியுடன் கூடிய நடமாடும் வாகனம் மூலம் காசநோய் கண்டறியும் முகாம்நடைபெறுகிறது. தொடர்ந்து இரண்டு வாரங்களுக்கு மேல் இருமல், மாலைநேரகாய்ச்சல், பசியின்மை, எடைக்குறைவு போன்ற அறிகுறிகள் இருந்தால் சளி பரிசோதனை, எக்ஸ்—ரே பரிசோதனை செய்து கொள்ளவேண்டும். காசநோய் கண்டறியப்பட்டால் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் காசநோய் மாத்திரைகள் இலவசமாக வழங்கப்படும் என்றும், மேலும்சிகிச்சை காலம் முடியும்வரை ஆறு மாதத்திற்கு உதவித்தொகையாக ரூ.500 வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார். காசநோயை கண்டுபிடிப்போம் இ குணப்படுத்துவோம், ஒன்றிணைந்து அகற்றுவோம், என்றும் வரும் 2025 ம் ஆண்டுக்குள் காசநோய் இல்லாத தமிழகத்தை உருவாக்குவோம் என கேட்டுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது டெய்சிகுமார், துணை இயக்குநர் சுகாதாரம்) மரு.மீரா, காசநோய் பிரிவு துணை இயக்குநர் மரு.கருணாகரன். கடலூர் தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர்மரு.சாய்லீலா, காசநோய் பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர்களுக்கு இலவச மரக்கன்றுகளை

### மாவட்ட ஆட்சியர் பாலசுப்ரமணியம் வழங்கினார்



கடலூர் மாவட்டம் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் கி.பாலசுப்பிரமணியம், மரக்கன்றினை நட்டுவைத்து, இலவச மரக்கன்றுளை ஆசிரியர்களுக்கு வழங்கினார்.இளந்தளிர் கடலூர் என்ற அமைப்பு மூலம் இதுவரை 12 பள்ளிகள் மற்றும் 2 கல்லுரிகளில் 1075 மரக்கன்றுகள் பாதுகாப்புடன் நடப்பட்டு முறையாக பாரமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு மாவட்டம் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மரக்கன்றினை நட்டுவைத்து, இலவச மரக்கன்றுளை ஆசிரியர்களுக்கு வழங்கினார் தொடர்ந்து 1000 மரக்கன்றுகளை கடலூர் நகராட்சிகூத்துபாக்கம் புனித வளனார் மெட்ரிகுலேஷனன் பள்ளி, ரூட்ஸ் கிட்ஸ் பள்ளி, வாண்டியாம்பள்ளம் ஊராட்சி ஒன்றியம் தொடக்க பள்ளி, ஆண்டார்முள்ளிப்பள்ளம் ஊராட்சி ஒன்றியம் பள்ளிகளுக்கு அகிய பள்ளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.இந்த நிகழ்ச்சியில் கூடுதல் ஆட்சியர், வளர்ச்சி) திட்ட இயக்குநர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் டெய்சிகுமார், கடலூர் மாவட்ட கல்வி அலுவலர் சுந்தரமூர்த்தி, இளந்தளிர் அமைப்பினர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## காட்டுமன்னார்கோவில் அருகே நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்ட வயல்களை சூழ்ந்த தண்ணீர்



காட்டுமன்னார்கோவில் அருகே கண்டமங்கலம் பகுதியில் மிகவும் பழமை வாய்ந்த நாரைக்கால் ஏரி அமைந்துள்ளது. பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் இந்த ஏரியின் மூலம் கண்டமங்கலம், வீராணநல்லூர், டி.மடிப்புரம், குருங்குடி, நாட்டார்மங்கலம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த சுமார் 600 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெற்று வருகிறது. இந்த ஏரிக்கு கீழணையில் இருந்து வடவாறு வழியாக வெட்டு வாய்க்கால் மூலம் ஆண்டுதோறும் தண்ணீர் திறந்து விடப்படும். இந்நிலையில் கீழணையில் இருந்து பாசனத்திற்காக கடந்த 29 ந்தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதையொட்டி காட்டுமன்னார்கோவில், குமராட்சி பகுதியில் சம்பா நேரடி நெல் விதைப்பு பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டனர். அதேபோல் கண்டமங்கலம் கிராமத்திலும் சுமார் 200 ஏக்கரில் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு செய்திருந்தனர். இதற்கிடையே சிதம்பரம்—திருச்சி சாலையில் 4 வழிச்சாலை அமைப்பதற்காக விளைநிலங்கள், வீடுகள் இ மனைகள் கையகப்படுத்தப்படுத்தும் பணிகள் நடந்து வருகிறது. இப்பணிக்காக நாரைக்கால் ஏரியில் இருந்து மண் எடுக்கப்படுகிறது. இந்த பணிக்காக வெட்டு வாய்க்காலில் இருந்து நாரைக்கால் ஏரிக்கு தண்ணீர் செல்லாத வகையில் 3 இடங்களில் மண்ணால் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் ஏரிக்கு தண்ணீர் செல்ல தடை ஏற்பட்டதால், அந்த தண்ணீர் கண்டமங்கலம் பகுதியில் சம்பா நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்ட சுமார் 200 ஏக்கர் விளை நிலங்களுக்குள் புகுந்து சூழ்ந்துள்ளது. மேலும் தினசரி மழை பெய்து வருவதாலும் விளைநிலங்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இதனால் விவசாயிகள் மிகவும் கவலை அடைந்துள்ளனர். மேலும் தண்ணீரை வடிய வைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதோடு, உரிய இழப்பீடும் வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

## சிதம்பரம் அருகே முதலை கடித்து இருவர் மருத்துவமனையில் அனுமதி!



சிதம்பரம் அருகே முதலை கடித்து 2 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைபெறும் 2 பேரிடமும் வனத்துறை அதிகாரிகள் ஆறுதல் கூறி விசாரணை செய்தனர்.சிதம்பரம் அருகே கிள்ளையை அடுத்துள்ள பனங்காடு கிராமத்தைச் சேர்ந்தவர் இராமதுரை மகன் இராஜீவ்காந்தி(35) விவசாயியான இவர் திங்கள்கிழமை மதியம் அதே பகுதியில் உள்ள வாய்க்காலில் முகம் கழுவியுள்ளார். அப்போது வாய்க்காலில் இருந்து முதலை அவரது முகத்தைக் கடித்துள்ளது. இதனால் ராஜீவ்காந்தி அலறியுள்ளார். அவரின் அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஓடிச்சென்று அவரை மீட்டு சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். இதுகுறித்து சிதம்பரம் வனத்துறைக்குப் பொதுமக்கள் தகவலும் தந்தனர். கடலூர் மாவட்ட வன அலுவலர் செல்வம் உத்தரவின் போரில் சிதம்பரம் வனச்சரக அலுவலர் செந்தில்குமார்இ வனவர் அஜிதாஇ வனப் பணியாளர்கள் புஷ்பராஷ்இ அமுதப்பிரியன் ஆகியோர் சம்பவ இடத்திற்குச் சென்று வாய்க்காலில் இருந்த 4 அடி நீளமும் 50 கிலோ எடை கொண்ட குட்டி முதலையைப் பிடித்து வக்காரமாரி குளத்தில் விட்டனர். அதேபோல் குமாட்சி அருகே உள்ள தவர்த்தாம்பட்டு கிராமத்தைச் சேர்ந்தவர் கலியமூர்த்தி மகன் மாரியப்பன்(48) விவசாயியான இவர் திங்கட்கிழமை மாலை கிராமத்துக்குப் பின் பகுதியில் உள்ள பழைய கொள்ளிடம் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தார். அப்போது முதலை ஒன்று அவரது வயிறு மற்றும் வலது தொடைப் பகுதிகளில் கடித்துள்ளது. மாரியப்பன் வலி தாங்க முடியாமல் அலறியுள்ளார். அவரின் அலறல் சத்தம் கேட்டு கிராமத்தில் இருந்து பொதுமக்கள் அவரை மீட்டு சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். இந்தநிலையில் ராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதலை கடித்துச் சேர்க்கப்பட்டிருந்த பனக்காடுக் கிராமத்தைச் சேர்ந்த இராஜீவ்காந்திஇ தவர்த்தாம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த மாரியப்பன் ஆகியோரிடம் சிதம்பரம் வனச்சரக அலுவலர் செந்தில்குமார் தலைமையிலான வனத்துறை அலுவலர்கள்இ பணியாளர்கள் கொண்டு அவர்களுக்கு ஆறுதல் கூறி விசாரணை செய்தனர்.

## சிதம்பரம் அருகே 4 நாட்களாக திறக்கப்படாத

# ரேஷன் கடை ஏழைமக்கள் தவிப்பு...!




சிதம்பரம் பகுதியில் சரவணபவ கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் 10 க்கும் மேற்பட்ட கடைகள் அண்ணாமலைநகர், கனகசபை நகர், திருவக்குளம், மாரியப்ப நகர், காசுக்கடை தெரு உள்ளிட்ட பகுதியில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் இதில் திருவக்குளம், கனகசபை நகர், தில்லையம்மன் கோயில் அருகே உள்ள கடை என இன்னும் சில கடைகள் கடந்த 4 நாட்களாகத் திறக்கவில்லை. இதனால் ஏழை பொதுமக்கள் மாதம் முதல் வாரத்தில் பொருட்கள் வாங்க முடியாமல் சிரமம் அடைவதாகக் கூறுகின்றனர். மேலும் ரேஷன் கடைகளை உடனே திறக்க சம்பந்தப்பட்ட அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து சிதம்பரம் வட்ட வழங்கல் அலுவலர் நந்திதாவிடம் கேட்டபோது, சிதம்பரம் பகுதியில் செயல்பட்டு வரும் சரவணபவ கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் செயல்படும் கடையில் பணியாற்றிய ஊழியர்களை பணி மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களை மாற்றம் செய்யப்பட்ட கடைகளில் பணிசெய்யமாட்டேன் எனக் கூறி கடையைத் திறக்காமல் இருந்து வருகிறார்கள். இது குறித்து பொதுமக்கள் மத்தியில் இருந்து தொடர்ந்து புகார் வந்தவண்ணம் உள்ளது. இது தவறான நடைமுறை சம்பந்தப்பட்டவர்கள் மீது துறைசார்ந்த நடவடிக்கை எடுக்கப்படும், என்றார். கடலூர் மாவட்ட கூட்டுறவுதுறை துணைப்பதிவாளர் சண்முகம் கூறுகையில்: சிதம்பரம் பகுதியிலுள்ள ரேஷன் கடையில் பணியாற்றிய சிலருக்குக் கடலூர் தலைமையிடத்திற்கு பணி மாறுதல் செய்யப்பட்டுள்ளது. புதிய ஆட்கள் வந்து பணியில் சேரும் வரை ஏற்கனவே இருந்தவர்கள் தான் பணியில் இருந்து பொதுமக்களுக்கு சேவை செய்யவேண்டும். இவர்கள் கடையைத் திறக்காதது பற்றி இதுவரை தெரியாது. சம்பந்தபட்டக் கண்காணிப்பு அலுவலரைத் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வலியுறுத்துகிறேன், என்றார். தமிழ்நாடு நியாவிலைகடை பணியாளர்கள் சங்க மாநிலபொதுசெயலாளர் ஜெயச்சந்திரராஜா கூறுகையில்; ரேஷன் கடையில் பணியாற்றுபவர்கள் மிகவும் சொற்ப வருமானத்தில் பணியாற்றி வருகிறார்கள். சிதம்பரத்தில் உள்ளவர்களை கடலுருக்கு மாற்றினால் போக்குவரத்து செலவு போக மிஞ்சுவது வெறும் சொற்ப வருமானம் தான், விற்பனையாளர்களைத் தலைமையிடத்தில் உள்ள சுயசேவை பிரிவுக்கு மாற்றுகிறார்கள் அதில் ஊழியர்கள் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை பணியில் இருக்க வேண்டும். இதற்கு அலுவலகத்தில் உள்ளவர்களைக் கொண்டு பணி செய்யலாம், சுயசேவைபிரிவில் பல்வேறு பிரச்சனைகள் உள்ளது. இதனால் ஊழிகள் சொற்ப சம்பளத்தையும் இழக்கும் நிலை உள்ளது. இதுகுறித்து அதிகாரிகள் மட்டத்தில் பேசி வருகிறோம். விரைவில் சரிசெய்யப்படும் என்றார்.

# சிதம்பரம் அரசு மருத்துவக் கல்லூரி பயிற்சி மருத்துவர்களின் போராட்டம் வாபஸ்!




சிதம்பரத்தில் உள்ள அரசு ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரியில் பணியாற்றும் பயிற்சி மருத்துவர்கள் மற்ற அரசு மருத்துவக் கல்லூரியில் பயிற்சி மருத்துவர்களுக்கு வழங்கப்படும் ரூ.25 ஆயிரம் ஊதியத்தை வழங்க வேண்டும் என்று கடந்த 3 நாட்களாக கல்லூரி வளாகத்தில் கவனஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில் கல்லூரி வளாகத்தில் சனிக்கிழமை 4 வது நாள் போராட்டத்திற்கு பயிற்சி மருத்துவர்கள் ஒன்றுகூடியபோது கல்லூரியின் முதல்வர் ரமேஷ் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அழைத்து, மருத்துவ கல்லூரி இயக்குனர் மருத்துவர் நாராயண பாபு மற்றும் துணை இயக்குனர் இளமதி ஆகியோர் இரண்டு நாட்களில் பயிற்சி மருத்துவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று உறுதி அளித்துள்ளதாக எழுத்து மூலம் கடிதம் கொடுத்துள்ளார்.இதனைத் தொடர்ந்து எங்களின் கனிவான கோரிக்கையை அரசு ஏற்கும் என்ற நம்பிக்கையில் 100 க்கும் மேற்பட்ட பயிற்சி மருத்துவர்கள் போராட்டத்தில் ஈடுபடாமல் தற்காலிகமாக போராட்டத்தை வாபஸ் வாங்கிக் கொள்வதாக அறிவித்துள்ளனர். அதேநேரத்தில் கோரிக்கை நிறைவேறவில்லையென்றால் தினந்தோறும் கல்லூரி வளாகத்தில் கவனஈர்ப்பு போராட்டம் நடைபெறும் என்றும் தெரிவித்தனர்.

## கடலூர் மாவட்டத்தில் விவசாய பணியில் ஈடுபட்டிருந்த

# மின்னல் தாக்கி 2 விவசாயிகள் பலி




கடலூரில் வயலில் விவசாய பணிகளில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் 2 பேர் இடி தாக்கி உயிரிழந்தனர். கடலூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடந்த தினத்திற்கு முன் பரவலாக மழை பெய்தது. இந்த நிலையில், சிதம்பரம் அருகே முகையூர் கிராமத்தை சேர்ந்த பாலதண்டாயுதம் வயலில் நெல் விதைப்பு பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது திடீரென இடி தாக்கியதில் பாலதண்டாயுதம் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார், இதேபோன்று, புவனகிரி அருகே பிரசன்னராமாபுரம் கிராமத்தில் வயலில் உழவுப் பணி மேற்கொண்டிருந்த கலைச்செல்வன் என்பவரும் தலையில் இடி விழுந்து உயிரிழந்தார். மழையை பொருட்படுத்தாமல் தொடர்ந்து வேலை செய்து கொண்டிருந்த கலைச்செல்வன் இடி தாக்கி பலியாகினார். இடி, மின்னலுடன் மழை பெய்யும் போது வீட்டிலேயே பாதுகாப்பாக இருப்பது நல்லது என அறிவுறுத்தப்படுகிறது.

## கடலூர்: மீன்களில் ரசாயனம் தெளித்து விற்றால்

# கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## உணவுப் பாதுகாப்புத் துறையினர் எச்சரிக்கை



மீன்களில் ரசாயனம் தெளித்து விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கடலூர் மாவட்ட உணவுப் பாதுகாப்புத் துறையினர் எச்சரிக்கை விடுத்தனர்.கடலூர் பகுதியில் ரசாயனம் தெளிக்கப்பட்ட மீன்கள் விற்பனை செய்யப்படுகி என உணவு பாதுகாப்புத் துறையினர் ஞாயிற்றுக்கிழமை ஆய்வு மேற்கொண்டனர் கடலூர் முதுநகர் பகுதி, காரைக்காடு மீன் சந்தை உள்ளிட்ட இடங்களில் இந்த ஆய்வு நடைபெற்றது. அப்போது, வெளி மாநிலம், வெளி மாவட்டங்களில் இருந்து வந்த மீன் வாகனங்களிலும், கடலூர் முதுநகர் சந்தையிலும் ரசாயனம் தெளிக்கப்பட்ட மீன்கள் விற்பனை செய்யப்படுகிா என மாவட்ட உணவுப் பாதுகாப்பு நியமன அலுவலர் பி.கே.கைலாஷ்குமார் தலைமையில் அலுவலர்கள் சந்திரசேகரன், பெ.நல்லதம்பி, சுப்பிரமணியன் ஆகியோர் ஆய்வு செய்தனர் மீன்களில் பார்மலின் சேர்க்கப்பட்டுள்ளதா எனக் கண்டறிய ஹை மீடியா என்ற கருவி மூலம் பரிசோதனை செய்யப்பட்டதில். அதுபோன்ற ரசாயனம் எதுவும் கண்டறியப்படவில்லை எனவும், கெட்டுப்போன மீன்கள் ஏதும் விற்பனை செய்யப்படவில்லை எனவும் உணவுப் பாதுகாப்புத் துறையினர் தெரிவித்தனர். வியாபாரிகள் ரசாயனம் கலந்த மீன்களை விற்பனை செய்யக்கூடாது என்றும், அவ்வாறு விற்றால் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மாவட்ட அதிகாரி எச்சரிக்கை விடுத்தார்




பிரபல பிரிண்டிங் நிறுவனத்திற்கு அலுவலக பணிக்கு ஆட்கள் தேவை..

இடம்:மயிலாடுதுறை

தொடர்புக்கு..

9597887847

விளம்பர தொடர்புக்கு

8870884969

விளம்பர தொடர்புக்கு

9597887847
8870884969

